தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 மே 6, சனிக்கிழமை.

சித்திரை 23, சுக்ல — திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சர்த்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.''

உழவு செய்ய முடியாமல் வேறு பணிகளை மேற்கொண்டு உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்கிப் போற்றுவதால் உழவு செய்கின்றவர்களே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள்.

1. வினாக்கள் — விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

தீயணைப்பு நிலையங்களுக்கு ஆம்புலன்ஸ்.

227.—(*வினா எண். 286) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் ஆம்புலன்ஸ் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு நோயாளர் ஊர்தி (ஆம்புலன்ஸ்) ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகும். தற்போது 69 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. மீதமுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு, அரசின் நிதி நிலைமைக்கேற்ப, ஆம்புலன்ஸ் (நோயாளர் ஊர்தி) வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக ஒரு கோட்டத்திலே இருக்கின்ற தீயணைப்பு நிலையங்களுக்காவது இந்த ஆண்டு 1989–90 முடிவதற்குள்ளாக ஆம்புலன்சுகள் வழங்கப்படும் என்ற அளவிற்காவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆகின்ற செலவினைக் கருத்திற்கொண்டு, இந்தச் செயற் குறிப்பு இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. அது முடிந்த பிறகுதான் இது குறித்து எந்த முடிவும் எடுக்க முடியும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர தீயணைப்பு நிலையங்களில் உள்ளதைப் போல் தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தீயணைப்பு நிலையங்களும் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி ஆம்புலன்சைப் பற்றியது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேள்வி ஆம்புலன்சைப் பற்றியது என்று சொன்னார்கள். ஆம்புலன்சை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற தேவையே நிதி நிலைக்கேற்ப என்று சொன்னார்கள். நிதி நிலையை மட்டும் பார்க்காமல் அதனுடைய அவசியத் தேவையைக் கருதி, ஆம்புலன்சு சில குறிப்பிட்ட நகரங்களுக்காவது உடனடியாக வழங்க ஏற்பாடு செய்வதோடு, அங்கே இருக்கக்கூடிய தீயணைப்பு வண்டிகள் பழுதுபட்டு, ரிப்பேராகி, டாங்கர்கள் இல்லாமல் இருப்பது, இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் ஏற்பட்டு தீயணைப்பு வண்டிகள் கூடப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒரு அவசர உணர்வோடு அதைக் கவனிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போதுள்ள தீயணைப்பு நிலையங்களில் இந்த ஆம்புலன்சு வண்டி 105 நிலையங்களில் தான் இல்லாமல் இருக்கின்றது. ஆனாலும் மாண்புமிகு உறுபபினர் சொன்ன அந்தக் கருத்தை மனதில் கொண்டு, படிப்படியாக ஆம்புலன்சு வண்டிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்கள் இருக்கக்கூடிய இடத்தில் மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த

மருத்துவமனைகளில், ஆம்புலன்சு வண்டிகள் இல்லாத ஊர்களில், தீயணைப்புப் படைப் பிரிவிலே இந்த ஆம்புலன்சு வண்டிகளைக் கொடுக்க முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கருத்து. அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்காத் தலைநகரங்களில் ஆம்புலன்சு வண்டி இருப்பது மிக அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் மருத்துவ மனையில் ஆம்புலன்சு இல்லாத காரணத்தால் ஆம்புலன்சு தீய ணைப்பு நிலையத்திலிருந்தால் உடனடியாக உயிர்களையும், விபத் துக்களையும் காப்பாற்ற பண்ணுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆகவே இந்த ஆண்டாவது எல்லாத தீயணைப்பு நிலையங்களுக் கும் ஆம்புலன்சு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த ஆம்புலன்சு படிப்படியாக ஆங்காங்கே வழங்கப்படும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்களில் இருக்கும்படியான இந்த ஆம்புலன்சு வண்டிகள் அவசர வேலைகளுக்காக எடுக்கப்படு கின்றபோது பழுதடைந்து இருக்கின்ற நிலை கடந்த காலத்தில் நீடிப்பதனால், இந்த அரசால் தயார் நிலையில் அந்த வாகனங் களை நிறுத்தி வைப்பதற்கு புதிய உத்தரவு ஏதேனும் அறிவிக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பழுதடைந்தவைகளைச் சரி செய்வதுதான் இந்த அரசின் கடமை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள்.

228 [*வினா எண். 450) திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், சிப்காட், சிட்கோ, டிட்கோ மூலம் தொழிற்சாலைகளைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?